11. துணை மானியக் கோரிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ள செலவினங்களில் முக்கியமானவற்றைப் பற்றி நான் இதுவரை எடுத்துக் கூறினேன். உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விரிவான விளக்கக் குறிப்புகளில் இந்த இனங்களுக்கான விவரங்களைக் காணலாம். 1989-90-ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம் மன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன். வணக்கம்.

8. அறிவிப்பு.

முதல் துணை நிதிநிலை அறிக்கை (1989-90) வெட்டுத் தீர்மானங்கள் அளிப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1989-90-ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலைஅறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கைகள் குறித்து, வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள், அவற்றைப் பேரவையின் 190-வது விதிக்கிணங்க, 24—1—1990 புதன்கிழமை மாலை 3-00 மணிக்குள் பேரவைச் செயலகத்தில் கொடுக்கவேண்டும்.

9. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்— (தொடர்ச்சி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் இப்போது இருக்கின்ற நேரப்படி எஞ்சியிருக்கின்ற நேரம் 96 மணித்துளிகள் மட்டுமே. எனவே, கிட்டத்தட்ட 8 அல்லது 9 பேர் வரைக்கும் பேச வாய்ப்புத் தரப்படும். சரியாக 10 மணித்துளிகளுக்குள் அவரவர்களுடைய பேச்சை முடித்துக் கொள்ள வேண்டும். குறுக்கீடுகளைக் குறைக்க வேண்டும். வாய்ப்பிருந்தால் நிறுத்த வேண்டும். குறுக்கீடுகள் கூடிப்போனால், கடைசியில் இருப்பவர்கள் பேச முடியாத நிலைமை கண்டிப்பாக ஏற்படும். அவை 1 மணிக்குச் சரியாக முடியும் என்பதை நினையூட்டி திரு. சோ. பால்ராஜ் அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

11-25 மணி

திரு. சோ. பால்ராஜ்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகிற வாய்ப்பு கிடைத்தமைக்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த வாய்ப்பினை வழங்கிய தமிழகத்தின் பொற்காலத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்ற இனமானத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு முதன் முதலில் நான் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாத வருமானம் ரூபாய்